2. சிறப்புக் கவன ஈர்ப்புகள்—தொடர்ச்சி

(ஆ) விழுப்புரம் நகர்மன்றம் செயல்படாமை-தொடர்ச்சி

டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் விவாதத்திற்கு இடம் இல்லை. (குறுக்கீடுகள்) நகர்மன்றத் தலைவருக்கு அறிவுரை சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

3. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனத் திட்டம், திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் திறந்து விடுதல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. ஜெயராமன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். (குறுக்கீடுகள்)

டாக்டர் க. பொன்முடி: இது என்ன? (குறுக்கீடுகள்)

திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)..

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)..

4. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்புகள்

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்து இருக்கிறோம்; கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்து இருக்கிறோம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. இன்றைக்கு துணை நிதிநிலை அறிக்கை மீது விவாதம் இருக்கிறது. எனவே இன்றைக்கு உங்களுடையதை எடுத்துக்கொள்ள முடியாது. (குறுக்கீடுகள்)...

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: இன்னும் ஒரு நாள்தான் இருக்கிறது. எதையுமே எடுக்கப் போவதில்லை. (குறுக்கீடுகள்) ** (குறுக்கீடுகள்)

டாக்டர் க. பொன்முடி: விளக்கம் சொல்ல வாய்ப்பு கொடுங்கள் (குறுக்கீடுகள்)

3. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டம், திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் திறந்து விடுதல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதத்திற்கு இடமில்லை. (குறுக்கீடுகள்) திரு. வி. ஜெயராமன். (குறுக்கீடுகள்).

முற்பகல் 11-30

திரு. வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பரம்பிக்குளம் ஆழியாறு அணைக்கட்டுத் திட்டத்தில் திருமூர்த்தி அணையின் முதலாம் மண்டலத்திலிருந்து பாசனத்திற்குத் தண்ணீர் விட வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)

அறிக்கை

தற்போது அணையிலுள்ள நீரின் இருப்பு ஒரு முழுப் பயிர் காலத்திற்கும் நீர் விட போதுமானதாக இல்லை. எனினும் தற்போது இருப்பில் உள்ள நீர் அளவைக் கவனத்தில் கொண்டு மற்றும் விவசாயிகளின் கோரிக்கையின் படியும் சிறப்பு நனைப்பாக (Special Wetting)

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.